6/05.

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல:35/89

அரசாங்க நிருவாக, மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்.
கொழும்பு- 07.
1989, ஆனி 7 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் அனைவருக்கும்.

<u>கட்டணம் கொடுக்கும் முறையில் மொழிபெயர்ப்பு வேலைசெய்வித்தல்</u>

தற்போது அரசாங்க திணைக்களங்களில் போதியளவு மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாதமையினால் பின்வரும் வீதங்களில் கட்டணமொன்றை வழங்கி மொழி பெயர்ப்பில் தேர்ச்சியுடைய அனுபவம் வாய்ந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் சேவைகளைப் பெறுவதற்கு இத்தால் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது;

தொழினுட்பம் சாராத மொழிபெயர்ப்புகள் - 360 சொற்களுக்கு 15/-
தொழினுட்பம்சார் மொழிபெயர்ப்பு - 360 சொற்களுக்கு 30/- ரூபா.
மொழிபெயர்ப்பிலுள்ள சொற்களின் எண்ணிக்கை 360 க்குக் குறைவாக இருக்குமிடத்து கொடுப்பனவு சரிசமவீத அடிப்படையொன்றில் வழங்கப் படலாம்.

2. இச்சுற்றறிக்கையின் நியதிகளின்படி மொழிபெயர்ப்புகளைச் செய்விப்பதில் பின்வரும் நடைமுறைகள், திணைக்கள/நிறுவன தலைவரின் ஏற்புடன் பின்பற்றப்படல் வேண்டும.

ம.ப.பா.